## உங்கள் வருகையின் போது உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்பாக வைத்திருத்தல்:

நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போது உங்கள் மருத்துவமனை அடையாளக் கைப்பட்டியை அணியுங்கள்.

பின்வரும் நிலைமைகள் உங்களுக்கு இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்:

- நீங்கள் கடந்த ஆண்டில் ஒரு தடவை கீழே விழுந்துவிட்டீர்கள்.
- உங்களுக்குக் கைத்தடி, நடைவண்டி, ஊன்றுகோல் அல்லது சக்கர நாற்காலி தேவை.
- உங்களுக்குக் குழப்பம், மயக்கம் ஏற்படுகின்றது அல்லது உங்கள் சமநிலையை இழக்கக்கூடும்.

உங்களுக்குத் தேவையான எந்த உதவியையும் வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

நிலையங்களில் இருக்கும் கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தித் தொற்றுக் கட்டுப்பாட்டை மேம்படுத்த உதவவும்.

உங்கள் அணுகலைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்தவொரு நுழைதல், வெளியேறுதல் அல்லது நாங்கள் வழங்கும் சேவைகள் குறித்துக் கண்டறிந்த தடையற்ற சூழலை உருவாக்குவதற்கு எங்களுக்கு உதவவும்.

நீங்கள் செவிப்புலனற்றவராக, செவிப்புலன் இழந்தவராக அல்லது செவிப்புலன் குறைந்தவராக இருந்தால், உங்கள் ஸ்மார்ட்போனில் பயன்படுத்துவதற்கு எங்கள் இலவச விளக்கச் சேவைகள் அல்லது இலவச தலைப்புச் சேவை ஆப்ஸைக் கேளுங்கள்.

அனைவருக்கும் சமமான பராமரிப்பை வழங்குவதில் நாம் பெருமிதம் கொள்கின்றோம். உங்கள் உதவியுடன், நாங்கள் எங்கள் சேவையை மேம்படுத்திப் பாதுகாப்பான ஒரு சுகாதாரச் சூழலை வழங்க முடியும். உங்கள் வருகையின் போது:

- நாங்கள் எப்படிச் செயற்படுகிறோம் என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
- உங்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்க முடியும் என்றால் எங்களிடம் கூறுங்கள்.
- உங்களுக்குப் புரியாத எதையும் பற்றி எங்களிடம் கேள்விகளைக் கேளுங்கள்.

Form 300370(05/2023)

**Birchmount hospital**
3030 Birchmount Road
Scarborough, ON M1W 3W3
416-495-2400

**Centenary hospital**
2867 Ellesmere Road
Scarborough, ON M1E 4B9
416-284-8131

**General hospital**
3050 Lawrence Avenue East
Scarborough, ON M1P 2V5
416-438-2911

@SHNcares
SHN.ca

# SHN நோயறிதலுக்கான

## X-ray and Fluorography

## எக்ஸ்ரே மற்றும் ஃப்ளோரோகிராபி

### நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கான

SHN
SCARBOROUGH HEALTH NETWORK

# X-கதிர்கள் என்றால் என்ன?

எக்ஸ்-கதிர்கள் என்பது உடலின் உறுப்புகள் மற்றும் எலும்புகளின் படங்களை உருவாக்கப் பயன்படும் அயனியாக்கும் கதிர்வீச்சின் ஒரு வடிவமாகும். அவை நோய், நோயியல் மற்றும் சிகிச்சைக்கு உதவக்கூடிய விரைவான மற்றும் பயனுள்ள வழியாகும்.



ஃப்ளோரோகிராபி என்பது எக்ஸ்-கதிர்களைப் பயன்படுத்தி நிகழ்நேரத்தில் படங்களை உருவாக்குவதற்கான ஒரு முறையாகும். இது உள் கட்டமைப்புகளின் இயக்கம் மற்றும் செயல்பாட்டை நிரூபிக்கவும் மற்றும் உள்வைப்புகள் போன்ற சில நடைமுறைகளுக்கு உருவரைவு வழிகாட்டியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

எக்ஸ்-கதிர்களைப் பயன்படுத்தும் பரிசோதனைகளில் மேமோகிராம்கள், கம்ப்யூட்டட் டோமோகிராபி (CT) மற்றும் ஆர்டெரியோகிராம்கள் (இரத்த நாள ஆய்வுகள்) ஆகியவை அடங்கும்.

எக்ஸ்ரே பரிசோதனை செய்துகொள்வது உங்களை அயனியாக்கும் கதிர்வீச்சுக்கு ஆளாக்குகிறது, ஆனால் மருத்துவ இமேஜிங்கில் பயன்படுத்தப்படும் அளவுகள் குறைவாகவும், தேவைக்கு ஏற்ற அளவில் மட்டுமே இருக்கும்.

பரிசோதனை செய்யப்படுவதற்கு முன்னர் அதன் நன்மைகள் மற்றும் அபாயங்கள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு அயனியாக்கும் கதிர்வீச்சு பரிந்துரைக்கப்படுவதில்லை. X-ray பரிசோதனைக்கு முன்னர், நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா அல்லது நீங்கள் கர்ப்பமாக இருக்கக்கூடும் என எண்ணுகிறீர்களா என்று உங்கள் மருத்துவர் அல்லது உங்கள் பராமரிப்புக்குப் பொறுப்பான சுகாதார நிபுணரிடம் தெரிவிக்கவும்.

# நான் எதிர்பார்க்க வேண்டியது என்ன?

உங்கள் வருகையின் போது, நீங்கள் ஒரு மேலங்கியை அணியும்படி அல்லது நகைகள், மூக்குக் கண்ணாடிகள் அல்லது உலோகப் பொருட்களை அகற்றும்படிகேட்கப்படலாம், ஏனெனில் அவை கதிர்ப் படங்களில் குறுக்கிடலாம்.

நீங்கள் ஒரு தட்டையான இமேஜிங் தட்டில் படுக்கும்படி அல்லது தட்டுக்கு எதிராக எழுந்து நிற்கும்படி கேட்கப்படலாம். எப்போது அசையாமல் இருக்க வேண்டும் அல்லது உங்கள் மூச்சை உள்ளிழுத்துப் பிடித்து வைத்திருக்க வேண்டும் என்று உங்களுக்கு அறிவுறுத்தப்படும், அதனால் படங்கள் மங்கலாக இருக்காது.

சில சமயங்களில் உடலின் பாகங்களைச் சிறப்பாகக் காட்சிப்படுத்துவதற்கு கான்ட்ராஸ்ட் மீடியா எனப்படும் பொருள் தேவைப்படுகிறது.
இதை ஒரு பானமாக விழுங்கலாம், மலக்குடல் வழியாக எனிமாவாக கொடுக்கலாம் அல்லதௌ நேரடியாக மூட்டு அல்லது இரத்த நாளங்களில் செலுத்தலாம். நாம் பயன்படுத்தும் கான்ட்ராஸ்ட் மீடியா பாதுகாப்பானது மற்றும் பக்க விளைவுகள் அரிதானவை

கான்ட்ராஸ்ட் மீடியா தேவைப்பட்டால், உங்கள் பரிசோதனைக்கு முன்னர்
உங்கள் மருத்துவ வரலாறு பற்றியும் இது உங்களுக்குப் பொருத்தமானதா எனச் சரிபார்ப்பதற்காகவும் நாங்கள் உங்களிடம் சில கேள்விகள் கேட்போம் .

# என்னைத் தயார் செய்வது எப்படி?

பெரும்பாலான எக்ஸ்ரே பரிசோதனைகளுக்கு சிறப்பு ஆயத்தம் எதுவும் தேவையில்லை. குறிப்பிட்ட வழிமுறைகள் ஏதாவது தேவைப்பட்டால் எங்கள் முன்பதிவுப் பிரிவால் உங்களுக்கு அறிவுறுத்தப்படும்.




# இதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

பரிசோதனையின் வகையைப் பொறுத்து, அதைச் செய்ய 5 முதல் 20 நிமிடங்கள் வரைத் தேவைப்படும்.

படங்கள் எங்கள் கதிரியக்க நிபுணர்களில் (இமேஜிங் நிபுணர்கள்) ஒருவரால் விளக்கப்பட்டு உங்கள் மருத்துவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

# பின்வரும் நிலைமைகள் உங்களுக்கு இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்:

- நீரிழிவு, ஆஸ்துமா, ஒவ்வாமை அல்லது ஏதேனும் இதயம், சிறுநீரகம் அல்லது கல்லீரல் பிரச்சனைகள் உள்ளவர்கள்.
- கான்ட்ராஸ்ட் மீடியாவிற்கு எதிர்வினை ஒன்று முன்னர் ஏற்பட்டிருந்தது.
- உங்கள் எக்ஸ்ரே பரிசோதனை பற்றி கேள்விகள் அல்லது கரிசனகள் ஏதாவது உள்ளன.